1993 ஏப்ரல் 13]

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்பார்வை அற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய சரித்திர நாயகியாம் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவிதான் (மேசையைத் தட்டும் ஒலி) அதிக அளவிற்குச் சலுகைகளை வழங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, கண்பார்வை அற்றவர்களுடைய குழந்தைகளுக்கு மட்டும் சலுகை அளிக்கப்படவேண்டுமென்று சொன்னால் நாளைக்கு ஊனமுற்றவர்களுடைய குழந்தைகளுக்கும் அந்தச் சலுகைகளைக் கேட்பதற்குரிய வாய்ப்பு உண்டு. மனவளர்ச்சி குன்றியவர்களுடைய குழந்தைகளுக்கும் அந்தச் சலுகைகளைக் கேட்க வாய்ப்பு உண்டு என்கிற காரணத்தினால் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 338, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

338—

பெரியபக்கலம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி

*9528 **திரு. கே. கந்தசாமி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதி, பச்சைமலை ஊராட்சி பெரியபக்கலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியை ஆதிதிராவிடர் உறைவிடப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே நடைபெற்றுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளாக மாற்றுவது தேவையற்றது என்று கருதப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலை ஊராட்சியில் ஒருங்கிணைந்த மலைவாசி மக்கள்

மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிட நலத்துறையின் சார்பாக உண்டு உறைவிடப்பள்ளியை ஏற்படுத்தினால் ஆதிவாசி மாணவர்களுக்கு இலவச உணவு கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அதிக மாணவர்கள் படிக்க வருவார்கள். எனவே ஊராட்சி ஒன்றியப் பள்ளியை ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் உண்டு உறைவிடப்பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கல்வித்துறையால் நடத்தப்படும் பள்ளி மாணவர்களுக்கும் அளிக்கப்படுவதால் ஏற்கனவே நடைபெற்றுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை ஆதிதிராவிட நலப்பள்ளியாக மாற்றத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியபக்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை, இரு முறைகூட வருவது கிடையாது. உண்டு உறைவிடப்பள்ளியாக இருந்தால் ஆசிரியர்கள் அங்கே இருந்து பள்ளி மாணவர்கள் படிப்பில் அதிகக் கவனம் செலுத்த முடியும், எனவே, அரசு இதைப் பரிசீலித்து, உண்டு உறைவிடப் பள்ளியாக மாற்ற முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு மனுச் செய்தால் தனியாக, ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக பள்ளி திறக்கப்படும். ஆனால் கல்வித் துறையின் மூலமாக இயங்கும் பள்ளியை ஆதிதிராவிடத் துறையால் மாற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

339—

பூம்புகார் தொகுதியில் மீன் பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்தல்

15203* **திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடல் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?